லக்/-

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 5/96

எனது இல. 1/543 ஈ/17டி/94/02
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996, 02-15

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## மூடப்பட்டுள்ள திணைக்களங்களின் ஊழியர்களுக்கு நஉஷ்ட ஈடு வழங்கல்.

---

அரச திணைக்களங்கள் மூடப்பட்டதன் காரணமாக 10 வருடச் சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாததால் மூப்போய்வு நலன்களின்றி சேவை முடிவுறுத்தப் பட்ட உத்தியோகத்தர்களுக்கு சலுகையளித்துக் கொண்டு வெளியிடப்பட்ட 1992 ஒக்டோபர் மாதம் 30 ஆந் தேதிய 31/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மீது தங்களின் அவதானம் ஈர்க்கப்படுகிறது.

02. இந்தச் சுற்றறிக்கையின் கீழ் நலன்களையடைந்த உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்து சேவையாற்றுவதற்குள்ள கால கட்டத்தில் சேவையாற்றவிருந்த சந்தர்ப் பத்தை இழக்க நேரிட்டதை கவனத்திற் கொண்டு நஉஷ்ட ஈடு ஒன்றை கொடுப்பனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை பின்வருமாறு கணித்துத் தீர்மானிக்க வேண்டும்.

கொடுப்பனவு செய்ய வேண்டிய நஷ்ட ஈட்டுத்தொகை = (இறுதியாகப் பெற்ற மாத வேதனம் × 60மாதங்கள் × ஓய்வுபெற்ற வயது (வருடங்களில்) (×) இழக்கப்பட்ட சேவைக்காலம் (மாதங்களில்) *) / (100 × வருடங்கள் 55 × மாதங்கள் 360)

* (ஓய்வு பெற்ற திகதி தொடக்கம் 55ஆவது பிறந்த திகதி வரை சேவைக்காலம்)

இத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவு செய்யக் கூடிய ஆகக் கூடிய நஷ்ட ஈட்டுத் தொகை 100,000/-ரூபாவுக்கு மேற்படுதலாகாது. தற்போதைக்கு இதன் பொருட்டு ஏதேனும் நஷ்ட ஈடு கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை இத் திட்டத்தின் கீழ கொடுப்பனவு செய்யப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ள வேண்டும்.

03. இந்த நஷ்ட ஈடு பெறப்பட்ட ஓய்வுக்காரர் ஒருவர் அரச திணைக்கள மொன்றிலோ அல்லது பிரதிநிதித்துவ நிறுவனமொன்றில் வேறு தொழிலொன்றை பெற்றிருப்பின் அவர் பெற்றுக் கொண்ட நஷ்ட ஈட்டுத் தொகையை மீளச் செலுத்த வேண்டுமென்பதுடன் மீண்டும் சேவையில் ஈடுபட்ட திகதி தொடக்கம் 55ஆம் பிறந்த திகதி வரும்வரை அவரின் ஓய்வூதியத்தை தடுத்து வைக்க வேண்டும்.

04. 1992.01.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின் மூடப்பட்ட திணைக்களங்களின் பணியாளர்கள் மட்டும் இதன் கீழ் நஷ்ட ஈடு பெறுவதற்கு உரித்துடையவராவார்கள்.

05. இந்தச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம். ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.